OL/2025(2026)/11/T-I, II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**11 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

බුද්ධ ධර්මය I, II
பௌத்தம் I, II
Buddhism I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## பௌத்தம் I

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் நீங்கள் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள ஏனைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றையும் பின்பற்றுக.

1. சித்தார்த்த போதிசத்துவர் முகங்கொடுத்த சவால்களிடையே மிகவும் கடினமான சவாலாக அமைந்தது
   (1) பத்து மாறன்களைத் தோற்கடித்தல்
   (2) மாறனின் மகள்மாரினால் தவறான வழியில் செல்வதைத் தவிர்த்திருத்தல்
   (3) அரசையும் பிள்ளைகள், மனைவி ஆகியோரையும் கைவிட்டு சந்நியாசம் கொள்ளுதல்
   (4) உலக இயல்பைத் தாண்டி உலகை வென்ற நிலைமையை அணுகுதல்

2. அனைத்து செல்வம், சந்தோஷம் பெற்று வாழ்ந்த இளைஞனானபோதும் ஒருவன் தேடியறியும் ஆவலினால் தான் வாழும் வாழ்க்கை வாழ்க்கையின் உண்மைத் தன்மை அல்ல என்பதை இளவரசன் சித்தார்த்தன் உணர்ந்து கொண்டது
   (1) நடிகைகளின் நெறிபிறழ்வைக் கண்டதன் மூலம்
   (2) யசோதரா தேவிக்கு மகன் இருப்பதாக அறிந்ததன் மூலம்
   (3) நான்கு சகுனங்களைக் கண்டதன் மூலம்
   (4) ரம்ய, சுரம்ப, சுப என்ற மூன்று மாளிகைகளில் வாழ்ந்ததன் மூலம்

3. புத்தபெருமான் தான் விளங்கிக் கொண்ட தர்மத்தை பிறருக்கு உபதேசிப்பதற்கு முற்பட்டபோது எதிர்நோக்கிய முக்கிய சவால்
   (1) ஆலாரகாலாம முனிவர் உருவில்லாத பிரமா உலகில் பிறவி எடுத்தமை
   (2) ஐந்து முனிவர்கள் இவர் ஞானம் பெற்றதை ஏற்கத் தயங்கியமை
   (3) உலக மனித சமூகத்துக்கு ஆழமான தர்மத்தை விளங்கிக்கொள்ளச் செய்தமை
   (4) பெருமளவு எண்ணிக்கையிலான தேவர்களும் பிராமணர்களும் தர்மத்தைக் கேட்க வருகைதந்தமை

4. சங்க இரத்தினத்தின் பண்புகளைச் சரியாக வெளிப்படுத்தும் தெரிவு யாது?
   (1) ஒபநயிகோ, ஆஹுனெய்யோ, பாஹுனெய்யோ, தக்கிணெய்யோ
   (2) ஆஹுனெய்யோ, பாஹுனெய்யோ, தக்கிணெய்யோ, அகாலிகோ
   (3) ஆஹுனெய்யோ, பாஹுனெய்யோ, தக்கிணெய்யோ, அக்ஞலிகரணியோ
   (4) ஆஹுனெய்யோ, பாஹுனெய்யோ, அக்ஞலிகரணியோ, சந்திட்டிகோ

5. சம்சாரக் கடலினைத் தாண்டுவதற்கு முயற்சி செய்யும் பௌத்தன் ஒருவன் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைப் பண்பு எப்பெயரினால் அழைக்கப்படும்?
   (1) பக்தி (2) நுண்ணறிவு (3) வீரம் (4) நம்பிக்கை (ஸ்ரத்தாவ)

[பக். 2 ஐப் பார்க்க

Department Of Examinations , Sri Lanka

6. சம்மா வாயாம என்பது நன்மைதரும் முயற்சியாகும். இதில் நால்வகைக் கூறுகளில் **அடங்காத** விடயம்
(1) பிறக்காத புண்ணியங்கள் உற்பத்தியாகுதல் (2) பிறக்காத பாவங்கள் உற்பத்தியாகுதல்
(3) பிறக்கும் புண்ணியங்கள் விருத்தியடைதல் (4) பிறக்காத பாவங்கள் உற்பத்தியாகாதிருத்தல்

7. ஆற்றல் இருந்தபோதும் முதுமையடைந்த பெற்றோர்களைக் கவனிக்காதிருத்தல், பேராசையுடன் பெண்கள், மது சூதாட்டம் என்பவற்றில் செலவுசெய்தல் ஒருவரின் வாழ்க்கை தோல்வியடையக் காரணமாகும் எனப் போதனை செய்த சூத்திரம் எது?
(1) வசல சூத்திரம் (2) பராபவ சூத்திரம்
(3) மங்கல சூத்திரம் (4) சிகாலோவாத சூத்திரம்

8. கண்கள் போன்ற புலன்கள் மூலம் உருவம் போன்றவற்றை அறிந்து கொள்ளுதல் தருமத்தில் அழைக்கப்படுவது
(1) ஞானம் என்றாகும். (2) சேதனா என்றாகும்.
(3) பரிதேவ என்றாகும் (4) விக்ஞ்ஞாண என்றாகும்.

9. ரூபம், சப்தம் என்றவாறு மனதில் உருவாக்கப்படும் அமைப்புக் குறியீடு என்பன தர்மத்தில் அழைக்கப்படுவது
(1) ரூப ஸ்கந்த என்றாகும். (2) வேதனா ஸ்கந்த என்றாகும்.
(3) சக்ஞ்ஞா ஸ்கந்த என்றாகும். (4) சங்கார ஸ்கந்த் என்றாகும்.

10. 'இது இருக்கும்போது இது உள்ளது.' 'இது இல்லாதபோது இது இல்லை' என்ற கோட்பாட்டுக்கு ஏற்ப 'அங்கு விறகு உள்ளபோது அங்கு நெருப்பு உள்ளது.' 'அங்கு விறகு இல்லாதபோது அங்கு நெருப்பு இல்லை.' என்ற காரண காரியத் தொடர்பை விளக்கும் போதனை எது?
(1) தம்சக்கப்பவத்தும் சூத்திரயம் (2) அக்கிக பாரத்வாஜ சூத்திரம்
(3) அக்கிக்கந்தோபம சூத்திரம் (4) அக்கிவச்சகொத்த சூத்திரம்

11. அனுலோமபட்டிச்ச சமுப்பாத கோட்பாட்டில் 'ஸ்பரிசத்தை காரணமாகக் கொண்டு சுகம், துக்கம் முதலிய உணர்வுகள் வெளிப்படும்' அழைக்கப்படுவது
(1) "சலாயதனபச்சயா பஸ்ஸொ" என்றாகும். (2) "பஸ்ஸபச்சயா வேதனா" என்றாகும்.
(3) "வேதனாபச்சயா தண்ஹா" என்றாகும். (4) "தண்ஹாபச்சயா உபாதானங்" என்றாகும்.

12. பட்டிச்சசமுப்பாத கோட்பாட்டின்படி பேராசையை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தில் குழப்பங்கள் போன்றன ஏற்படும் முறையை எடுத்துக்காட்டும் சூத்திர போதனை
(1) அக்கஞ்ஞ சூத்திரம் (2) வாசெத்த சூத்திரம்
(3) பிரம்மஜால சூத்திரம் (4) மகாநிதான சூத்திரம்

13. வலுவான நோக்கம் இல்லாது நிகழும் முழுமையற்ற குசலாகுசல கர்மம், தர்மத்தில் என்ன பெயரால் அழைக்கப்படும்?
(1) கருக கர்ம (2) ஆசன்ன கர்ம (3) ஆசிண்ண கர்ம (4) கடத்தா கர்ம

14. தனிநபர் செய்யும் பாவபுண்ணிய கர்மங்களுக்கு அமைவாக பெறும் தொகைக்கு ஏற்ப மீண்டும் மீண்டும் பிறப்பும் இறப்பும் வருவது தர்மத்தில் இனம் காணப்படுவது
(1) சங்சாரய என்றாகும். (2) பிறப்பு என்றாகும். (3) சுதிய என்றாகும். (4) நியாமய என்றாகும்

15. சர்வசக்தி கொண்ட படைப்பவரான கடவுள் ஒருவர் உள்ளார். நித்திய ஆத்மா ஒன்று உள்ளது என்ற கோட்பாடுகளை நிராகரிக்க உதவுகின்ற பௌத்தமதக் கற்பித்தல்கள்
(1) பட்டிச்ச சமுப்பாதய (2) திரிவித்தியாவ (3) சதர ர்திபாதய (4) அட்டலோக தர்ம

16. பௌத்த பகுப்பாய்வுக்கு ஏற்ப குறுகிய ஆயுள் வாழ்க்கை, நீண்ட ஆயுள் வாழ்க்கை முதலிய தனிநபர் வேறுபாட்டில் தாக்கம் செலுத்தும் காரணிகள் பற்றிய தெளிவான விளக்கத்தைக் கொண்டிருப்பவர்
(1) மறுபிறவி பற்றி மட்டும் சிந்திப்பவராவார்.
(2) வெற்றி தோல்வி பற்றிச் சிந்திப்பவராவார்.
(3) இவ்வுலக வாழ்க்கை பற்றியே சிந்திப்பவராவார்.
(4) கர்மா மற்றும் கர்மாவின் விளைவுகள் பற்றி விளக்கம் கொண்டிருப்பவராவார்.

17. உயிர்களின் மரணம், தோற்றம் பற்றிய அறிவு (சுதுபபாதஞானம்) அல்லது உயிர்களின் இருப்பு பற்றிப் பார்க்கும் அறிவு கொண்டிருக்கும் நபரொருவருக்கு
(1) பிறருடைய மனதைப் பற்றி அறிந்துகொள்ள முடியும்.
(2) அனுபவம் மூலம் மறுபிறவி பற்றி அறிந்துகொள்ள முடியும்.
(3) பல்வேறு அற்புதங்களை (ஸ்ருதி பிரதிஹார்ய) காட்ட முடியும்.
(4) தெய்வீக ஒலிகளைக் கேட்க முடியும்.



Department Of Examinations - Sri Lanka

**18.** மனதைக் கட்டுப்படுத்துவதில் தடை ஏற்படுத்தும், முக்திக்கான வழியைத் தடைசெய்யும் ஐந்து விடயங்கள் தர்மத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன
(1) ஐந்து வலிமைகள் (பஞ்ச பல) ஆகும்.
(2) ஐந்து தடைகள் (பஞ்ச நீவரண) ஆகும்.
(3) ஐந்து உலகளாவிய ஒழுங்கு (பஞ்ச நியாம) ஆகும்.
(4) ஐந்து பற்றுக்களின் கூட்டு (பஞ்ச உபாதான) ஆகும்.

**19.** "அவர் என்னை ஏசினார். என்னை அடித்தார். நான் தோற்றுவிட்டேன்." என்றவாறு பகைமை கொள்ளாது பகைமையை அமைதியடையப் போதிக்கும் தம்மபதத்தின் முதல் இரண்டு வரிகளாவன
(1) "அக்கொச்சமம் அவதிமம் - அஜினிமங் அஹாசிமே" ஆகும்.
(2) "சுகரானி அசாதூனி - அத்தனொ அஹிதானிச்" ஆகும்.
(3) "அத்தனாவ கதங் பாபங் - அத்தனா சங்கிலிஸ்ஸதி" ஆகும்.
(4) "தம்ச கம்மங் கதம் சாது - யம் கத்வா நானுதப்பதி" ஆகும்.

**20.** புத்த பெருமான் வாழ்ந்த காலத்தில் பாவமுள்ள நண்பர்களுக்கு சேவை செய்து சீலக் கோட்பாடுகளைப் பின்பற்றாமல் செயற்பட்டதால் சம்பாதித்த முழுப் பணத்தையும் செலவுசெய்து வறுமை நிலையடைந்த நபர் யார்?
(1) கோடீஸ்வரன் மகன் உக்கா
(2) கோடீஸ்வரன் மகன் கால
(3) கோடீஸ்வரன் மகன் மகாதன
(4) கோடீஸ்வரன் மகன் மிஹார

**21.** சிகாலோவாத சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செல்வத்தின் அழிவுக்குக் காரணமான நான்கு விடயங்களில் **அடங்காத** விடயம்
(1) அகாலமான நேரங்களில் வீதிகளில் அலைந்து திரிதல்
(2) பாவம் செய்யும் நண்பர்களுடன் தொடர்பு கொண்டிருத்தல்
(3) எப்போதும் நித்திரை கொள்ளுதல்
(4) சோம்பலுடன் காலத்தைக் கழித்தல்

**22.** "குழந்தாய், சக்கரவர்த்தி என்ற இந்த அரசுரிமை தந்தை வழி உரிமையாக உனக்கு வரவில்லை. இதற்கான உரிய ஒழுக்கம் மற்றும் நடத்தையை நிறைவேற்றுவதன் மூலம் ஒருவர் அதற்குத் தகுதியானவராக வேண்டும்." தனது மகனுக்கு இந்த அறிவுரையை வழங்கியவர்
(1) பிம்பிசார மன்னன்
(2) பிந்துசார மன்னன்
(3) உதேனி மன்னன்
(4) தல்ஹநேமி மன்னன்

**23.** "நல்லொழுக்கம், நற்குணம், கல்வியறிவுமிக்க துறவிகள், பிராமணர்கள் ஆகியோரிடமிருந்து அறிவுரை வழிகாட்டல் என்பன பெற்று நாட்டை ஆட்சி செய்க." இந்த அறிவுரை உள்ளடங்கிய பௌத்த அரச நிர்வாகம் பற்றிய கொள்கை
(1) பத்து அரச தர்மங்கள் (தச ராஜ தர்ம)
(2) சப்த அபரிஹானிய தர்ம
(3) தச சக்விதிவத்
(4) சிவ் சங்கராவத்

**24.** "சட்டம், நீதி, தர்மம் என்பவற்றுக்கு மாறாக செயற்படுவதால் ஆட்சியாளரின் பெருமை மாதத்தின் தேய்பிறைச் சந்திரன்போல வீழ்ச்சியடையும்." இதற்குக் காரணமாக அமைவது
(1) நான்கு தளைகளின் (சதர அகதி) செல்வாக்கின் கீழ் செயற்படல்
(2) சிவ் சங்கராவத்துக்கேற்ப செயற்படுதல்
(3) சிவ் பிரம்ம விஹரணவல்லுடன் செயற்படுதல்
(4) சதர கர்ம கிலேசத்தின் செல்வாக்கினோடு செயற்படுதல்

**25.** புத்த பெருமானுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணிய ஆட்சியாளன் மற்றும் அரசை சரியாகக் குறிப்பிடும் தெரிவு யாது?
(1) பிம்பிசார மன்னன் - கோசல அரசு
(2) கோசல மன்னன் - வத்ச அரசு
(3) உதேன மன்னன் - மகத அரசு
(4) சண்டபஜ்ஜோத மன்னன் - அவந்தி அரசு

Department Of Examinations , Sri Lanka

[பக். 4 ஐப் பார்க்க

26. உலகில் சமயங்கள் பற்றிய வரலாற்றில் எவ்விடத்திலும் காணமுடியாத, மேற்கிலும் கிழக்கிலும் உள்ள அறிஞர்களின் கவனத்துக்கும் புகழுக்கும் உள்ளாகிய பௌத்தத்துக்குரிய சிந்தனைச் சுதந்திரம் பற்றி விளக்கும் போதனை யாது?
(1) அனண சூத்திரம் (2) வசல சூத்திரம்
(3) பத்தகம்ம சூத்திரம் (4) காலாம சூத்திரம்

27. மங்கல சூத்திரத்தில் குறிப்பிடப்படும் மங்கல விடயங்களுக்கு உரித்து **அல்லாத** விடயமாவது
(1) முட்டாள்களுடன் தொடர்பு பேணுதல்
(2) அறிஞர்களுடன் தொடர்பு பேணல்
(3) கௌரவிக்கத் தகுதியுடையவர்களை கௌரவித்தல்
(4) பொருத்தமான இடத்தில் வசித்தல்

28. புத்த பெருமானால் கிரிமானந்த தேரருக்கு உபதேசித்த நோய்களுக்குக் காரணமான விடயங்களில் **உள்ளடங்காத** விடயம் எது?
(1) பித்தம் அதிகரிப்பதால் நோய்கள் ஏற்படும்.
(2) கபம் அதிகரிப்பதால் நோய்கள் ஏற்படும்.
(3) கர்ம விளைவுகளுக்கேற்ப நோய்கள் ஏற்படும்.
(4) ஒழுக்கமற்ற அல்லது தீங்கு விளைவிக்கும் நடத்தைகளில் ஈடுபடுவதால் நோய்கள் ஏற்படும்.

29. புத்தர் பெருமான் மகா மொக்கல்லான சூத்திரத்தை எந்த இடத்தில் உபதேசம் செய்தார்?
(1) விசால நகரின் வனத்தில் (2) கக்கரா குளத்தின் அருகில்
(3) கலந்தகனிவாப எனப்படும் இடத்தில் (4) மஹி ஆற்றின் கரையோரத்தின் அருகில்

30. புத்தர் பெருமானால் உபதேசிக்கப்பட்ட சமய தர்மம் மற்றும் விதிக்கப்பட்ட ஒழுக்கம் என்பவற்றைப் பிக்குமார்கள் ஒன்றிணைந்து நினைவிருத்திக் கூறுதல் அழைக்கப்படுவது
(1) உபோசதா கடைப்பிடித்தல் என்றாகும்.
(2) தர்மத்தைப் போதித்தல் என்றாகும்.
(3) பிரித் போதித்தல் என்றாகும்.
(4) தர்மத்தை மீண்டும் மீண்டும் கூறுதல் (தர்மசங்காயனா) என்றாகும்.

31. முதலாவது பௌத்த மகாநாட்டின்போது சூத்திர போதனைகள் சேகரிக்கப்பட்டு தொகுக்கும்போது ஒரு விடயத்திலிருந்து அடுத்த விடயப் பிரிவின் இலக்கம் அதிகரித்துச் செல்லும் விதத்தில் உபதேசிக்கப்பட்ட சூத்திரங்களின் தொகுப்பு நூல் எந்தப் பெயரால் அழைக்கப்படும்?
(1) தீக நிகாயா (2) மஜ்ஜிம நிகாயா
(3) அங்குத்தர நிகாய (4) சங்யுத்த நிகாய

32. "ஆனந்த, என்னால் உபதேசிக்கப்பட்ட தர்மமும் ஒழுக்கமும் இரண்டு ஆனாலும் அவை என்னுடைய இறப்பின் பின்னர் ஆசிரியராகும்." புத்த பெருமான் தனது வாழ்வின் இறுதிக் காலப்பகுதியில் உபதேசித்த இந்தக் கூற்று உள்ளடங்கியிருப்பது
(1) மகாபரிநிப்பான சூத்திரத்தில் ஆகும். (2) மகாசீகநாத சூத்திரத்தில் ஆகும்.
(3) மகாசதிப்பட்டான சூத்திரத்தில் ஆகும். (4) மகாசுதஸ்ஸன சூத்திரத்தில் ஆகும்.

33. திரிபிடகத்தை 'விபாஷா' என்ற பெயருடைய வர்ணனை (அட்டுவா) நூல்களாகத் தொகுத்து அவற்றினை செப்புத் தகடுகளில் எழுதி மஞ்சுசாக்களில் இட்டு தூபி ஒன்றினை நிர்மாணித்தவர்
(1) காலாசோக மன்னன் (2) சந்திரகுப்த மன்னன்
(3) தர்மாசோக மன்னன் (4) கனிஷ்க மன்னன்

34. "இலங்கை அரசின் சமயம் பௌத்த சமயமாக இருக்க வேண்டும். மன்னன் பௌத்தனாக இருக்க வேண்டும்" என்ற மரபு எழுந்தமைக்கான காரணம்
(1) பௌத்தர் அல்லாத மன்னர்கள் சிம்மாசனம் ஏறியமை
(2) வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள் ஏற்பட்டமை
(3) பௌத்த சமயத்துக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்புகள் வலுப்பெற்றமை
(4) பௌத்த சமயம் அடக்கப்பட்டமையும் ஏனைய சமயங்கள் தோன்றியமையும்

Department Of Examinations - Sri Lanka

**35.** மகிந்த தேரரினால் இலங்கை மக்களுக்கு பௌத்த மதம் மற்றும் கலாசாரம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டதும் இலங்கையர்களிடம் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றிய கூற்று **அல்லாத** தெரிவு எது?
(1) மரங்களின் வணக்கத்திற்குப் பதிலாக போதி அரசமர வணக்கத்தில் ஈடுபட்டனர்.
(2) இறந்தவர்களை வணங்குவதற்குப் பதிலாக இறந்தவருக்கு புண்ணியத்தை மாற்றுவதில் ஈடுபட்டனர்.
(3) பாறைகள் மலைகளை வணங்குவதற்குப் பதிலாக தூபிகளை வணங்குவதில் ஈடுபட்டனர்.
(4) தெய்வங்களுக்குப் புண்ணியம் செய்வதற்குப் பதிலாக காணிக்கைகள் பூசைகள் செய்வதில் ஈடுபட்டனர்.

**36.** தம்பதெனிய இலக்கிய காலப்பகுதியில் பாளி தம்மபதட்டகதாவ சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு எழுதப்பட்ட இலக்கிய ஆக்கம் எது?
(1) சிங்கள போதிவம்ச (2) சத்தர்ம ரத்னாவலி
(3) பன்சிய பனஸ் ஜாதக கதா (4) பூஜாவலிய

**37.** "புத்தரின் எல்லையற்ற நற்குணங்களைக் கணக்கிடும் எனது முயற்சி தாமரை இலையில் பனித்துளிகளைக் கட்டி மாலையாக அணிவது போன்றது" என்னும் இக்கூற்று உள்ளடங்கியிருப்பது
(1) பூஜாவலியில் (2) சசதாவத்தவில்
(3) மூவதெவ்தாவதாவில் (4) அமாவத்துரவில்

**38.** பல்வேறு கலாசாரங்களுக்கு அமைய உருவாகிய இனம் மற்றும் மதத்தவர் வாழும் சமூகச் சூழலில் அவர்களோடு கொள்கை முரண்பாடு ஏற்படுத்தாது வாழ்வதற்கு உதவும் குணப்பண்புகளின் தொகுதி தர்மத்தில் அழைக்கப்படுவது
(1) பஞ்ச சீலம் என்றாகும்.
(2) சதர அகதியிலிருந்து விடுதலை என்றாகும்.
(3) சப்த அபரிஹானிய தர்மம் என்றாகும்.
(4) சத்தர பிரம்மவிஹரன என்றாகும்.

**39.** பௌத்த ஓவியக் கலையின் ஆரம்பம் அனுராதபுர காலம் வரை பரந்திருக்கின்றது. அனுராதபுரக் காலத்துக்கு உரிய புராதன ஓவியங்களைக் காணக்கிடைக்கும் இரண்டு இடங்களைக் கொண்ட தெரிவு எது?
(1) மஹியங்கணை, திம்புலாகல
(2) சிகிரியா, ஹிந்தகலை
(3) மஹியங்கணை, திவங்க சிலைமனை
(4) கல்விகாரை, மெதவல விகாரை

**40.** பௌத்த கலை ஆக்கங்களில் தனித்துவமான கலைப்படைப்பாகக் கருதப்படும் சந்திரவட்டக்கல் தொடர்பான **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) படிக்கட்டின் ஆரம்பத்தில் காணப்படும் அரைவட்டக் கல் தூணாகும்.
(2) கலைத்துவம் மிக்க சந்திரவட்டக்கல் அனுராதபுரத்தில் பிசோ மாளிகைக்கு அருகில் அமைந்துள்ளது.
(3) அனுராதபுரக் காலத்தில் சந்திரவட்டக்கலில் எருது உருவம் அகற்றப்பட்டுள்ளது.
(4) சந்திரவட்டக்கல் வாழ்க்கைச் சக்கரத்தைக் குறிக்கின்றது என சேனரத் பரணவிதான குறிப்பிடுகின்றார்.

* *

Department Of Examinations, Sri Lanka

[பக். 6 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**11 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

| | |
|---|---|
| බුද්ධ ධර්මය | I, II |
| பௌத்தம் | I, II |
| Buddhism | I, II |

## பௌத்தம் II

* முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) போதிசத்துவரின் ஒப்பிட முடியாத உடல் அழகைக் கண்டதும் "இத்தகைய மகனைப் பெற்ற தாயும் தந்தையும் பக்குவமடைந்தவர்களாவர்" என யாரால் கூறப்பட்டது?

(ii) "ரகஸத் பவ்நொகொட - கெலெஸரயத்நு துறுகொட...." என்ற வரிகளால் புத்தரின் எந்தக் குணம் குறிப்பிடப்படுகிறது?

(iii) தர்ம ரத்தனத்தின் பண்பான 'ஸ்வாக்காத' என்பதன் கருத்தை எழுதுக.

(iv) பொரளை கோதமி விகாரை சுவர் ஓவியங்களை வரைந்த ஓவியரின் பெயர் யாது?

(v) 'திப்பானங் பரமங் சுகங்' என்பதன் கருத்தை எழுதுக.

(vi) 'அனவஜ்ஜ சுக' என்பதனை விளக்குக.

(vii) "சமணாமயங் மஹாராஜ - தம்மராஜஸ்ஸ சாவகா" என்பது யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

(viii) மாளிகாகந்த வித்தியோதய பிரிவேனாவையும் பேலியகொடை வித்தியாலங்கார பிரிவேனாவையும் ஆரம்பித்த பௌத்த குருமாரின் பெயர்களைத் தருக.

(ix) துமின்தாகமனவினால் இலங்கையர்கள் பெற்றுக்கொண்ட **இரண்டு** மரபுரிமைகளைக் குறிப்பிடுக.

(x) தொட்டகமுவே ஸ்ரீ இராகுல தேரரினால் எழுதப்பட்ட **இரண்டு** நூல்களின் பெயர்களைத் தருக.

**2.** (i) தச பாரமிதாக்களில் எவையேனும் **இரண்டின்** பெயர்களைத் தருக.

(ii) மேலே (i) இல் பெயர் குறிப்பிட்ட ஒரு பாரமிதாவை சுருக்கமாக விளக்குக.

(iii) தச பாரமிதாக்கள் போதிக்கும் நற்குணங்களை நிறைவு செய்து பிறருக்கும் சேவை செய்யும் முறையினை விளக்குக.

**3.** (i) "அத்தனாவ கதங் பாபங்" என்ற தம்மபத காதாவைப் பூரணப்படுத்தி எழுதுக.

(ii) அந்த காதாவின் கருத்தை எழுதுக.

(iii) தனிநபரால் செய்யப்படும் செயல்கள் அத் தனிநபரின் முன்னேற்றத்துக்கும் வீழ்ச்சிக்கும் உதவுகின்ற விதத்தினை எடுத்துக்காட்டுக.

**4.** (i) தூபிகளைக் கட்டியெழுப்பும்போது பயன்படுத்தப்படும் ஆறு கட்டட வடிவங்களில் **இரண்டினை** எழுதுக.

(ii) தூபிகளின் கட்டடக் கூறுகளில் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றை** விளக்குக.

(iii) மகிந்தவின் வருகையின் விளைவாக இலங்கை மக்களுக்கு உரித்தான மரபுரிமைகள் பற்றி மதிப்பிடுக.

[பக். 7 ஐப் பார்க்க

Department Of Examinations , Sri Lanka

**5.** (i) முதலாம் பௌத்த மகாநாடு நடாத்துவதற்குக் காரணமான விடயங்களில் **இரண்டினை** எழுதுக.

(ii) அந்த மாநாடு நடாத்தப்பட்ட இடம், நடாத்துவதற்கு எடுக்கப்பட்ட காலம் மற்றும் பங்கு பற்றிய தேரர்களின் எண்ணிக்கை என்பவற்றைக் குறிப்பிடுக.

(iii) முதலாம் பௌத்த மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் பௌத்த சமயத்தின் நீண்ட கால நிலைத்திருப்புக்கும் தொடர்ச்சிக்கும் உதவிய முறையினை விளக்குக.

**6.** (i) "ஜிகச்சா பரமா ரோகா" என்பதன் கருத்தை விளக்குக.

(ii) பத்தாலி சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு உணவை அளவு அறிந்து உண்பதினால் பெறும் நன்மையான விளைவுகள் **மூன்றினை** எழுதுக.

(iii) உடல், மனம் என்பவற்றின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதன் பெறுமதி பற்றி பௌத்தம் குறிப்பிடும் விடயங்களை விமர்சனரீதியாக மதிப்பீடு செய்க.

**7.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) வியாபாத நீவரணய

(ii) பிரதிமாகர

(iii) அலுவிகாரை மாநாடு

(iv) பெற்றோர், பிள்ளைகளின் கடமைகள்

* * *

Department Of Examinations , Sri Lanka

Department Of Examinations , Sri Lanka